ஆகவே, பாலாற்றை ஆதாரமாகக் கொண்டு இந்த ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சிக்கும் மற்றும் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 21 கிராமங்களுக்கும் 189 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அது மிக விரைவில் செயலாக்கத்திற்கு வரும்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் வானம் பார்த்த பூமியாக இருக்கிற காரணத்தால் குடிநீருக்கு பொது மக்கள் படுகிற துயரம் அதிகமாக இருக்கிறது. மழை பொழிந்தும் கூட அவர்களுக்கு அந்த குடிநீர்ப் பிரச்சினை இன்றைக்கும் தீர்ந்தபாடில்லை என்ற சூழ்நிலையில் இந்தத் திட்டத்திற்கு உடனடியாக செயல் வடிவம் கொடுக்க எவ்வளவு காலம் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அரசினுடைய நிர்வாக ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பியிருக்கிறது. அரசு நிர்வாக ஒப்புதலைத் தந்த உடன் இது விரைவில் செயல் ஆக்கம் செய்யப்படும்.

தஞ்சையில் விவசாயக் கல்லூரி.

155—(*வினா எண் 13935) திரு. ந. சிவஞானம் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையில் விவசாயக் கல்லூரி எப்போது, எங்கு ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாய கல்லூரியை ஆரம்பிக்க கொள்கையளவில் அரசு முடிவெடுத்துள்ளது. இந்தக் கல்லூரி அமைப்பதற்குரிய இடம் மற்றும் நிதிவசதி போன்ற விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

1987 நவம்பர் 17]

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையில் வேளாண்மைக் கல்லூரி காட்டுத் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று பல்கலைக் கழக கமிட்டி சிபாரிசு செய்து இருப்பதாக சென்ற முறை பொறுப்பு வகித்து வந்த வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையிலே மீண்டும் பரிசீலனை செய்து, இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் சிபாரிசு செய்த இடத்திலேயே ஆரம்பிப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுத் தோட்டம் என்ற இடத்தில் நான்காம் வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. தகுந்த இடங்களை ஆய்வுசெய்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அனுப்பியுள்ள செயற்குறிப்பின் மீது அரசு தற்போது பரிசீலனை செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை அருகே காட்டுத் தோட்டம் என்கின்ற இடம் நஞ்சை நிலமாக இருக்கின்ற காரணத்தால் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டிய சூழ்நிலை வருகிறது. அதனால் அரசுக்கும் ஏகப்பட்ட செலவு வருகிறது. தஞ்சை அருகே தெற்கே 10 கிலோ மீட்டரில் நடுவூர் என்ற ஓர் ஊர் இருக்கிறது. அங்கே 400 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் இருக்கிறது. அங்கே, அந்த இடத்திலே விவசாயக் கல்லூரியை நிறுவுவதற்கு அரசு ஆவன செய்யுமா? மேலும் மூன்று வருடமாகப் பரிசீலனையில் இருக்கிறது. இந்த ஆண்டாவது பரிசீலனை முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரி என்பது எல்லா வகைப்பட்ட நிலங்கள் இருக்கின்ற இடத்திலே தான் அமைய முடியும். வறண்ட இடத்திலே அமைத்துவிட்டு, விவசாயத்திற்கு பயிர் செய்வதற்கென்று வேறு இடத்தைத் தேடிக் கொண்டு போக முடியாது. ஆகவே நிலங்களை ஒரு நிபுணர் குழுதான்

போய்ப் பார்த்தது. அதுவும் இப்போது மாணவர்கள் வேறு புதிய விவசாயக் கல்லூரிகளே வேண்டாம் என்று உண்ணாவிரதம் இருக்கக் கூடிய காலம். விரைவிலே அந்த இரண்டையும் சேர்த்து பார்த்துத்தான் நாங்கள் முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. காலதாமதத்திற்கான காரணங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஆனாலும் எப்படியாவது விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்பது தான் என்னுடைய எண்ணமாகும்.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் அரசு விதைப் பண்ணை ஒன்று இருக்கிறது மாநில தென்னை ஆராய்ச்சிப் பண்ணை ஒன்றும் இருக்கிறது. அங்கே கிட்டத்தட்ட 400 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அதோடு மட்டுமல்ல. கல்லூரிக்குத் தேவையான கட்டிடங்கள் ஆர்.எம்.டி.சி. நிறுவனத்தின் மூலம் கிட்டத்தட்ட 20 கட்டிடங்கள் அங்கேயிருக்கின்றன. ஆகவே அமைய இருக்கின்ற கல்லூரியை பட்டுக்கோட்டையில் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா? அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் நவதானியங்கள் விளைவதற்கு ஏற்ற பகுதி பட்டுக்கோட்டைப் பகுதி. அந்தப் பகுதியில் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா? புரட்சித் தலைவர் அவர்கள் அதற்கான உத்தரவை இடுவார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பட்டுக்கோட்டை உறுப்பினர் தன்னுடைய தொகுதியைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார்கள். நன்றி.

. . . . . .

வாழ்க்கைக் கல்வித் திட்டம்.

156—(*வினா எண் 5120) திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழ்க்கைக் கல்வித் திட்டத்தை அமல்படுத்த மாநில அரசு உலக வங்கியின் உதவியை நாடியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?